தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் இனிகோ எஸ்.இருதயராஜ் ஆகியோர் ரோம் நகர் வாடிகனில் நேற்று முன்தினம் (25.04.2025) நடைபெறும் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் திருத்தந்தை போப் பிரான்சிஸ் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் சார்பில் பங்கேற்று, திருத்தந்தை போப் பிரான்சிஸ் அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தி னார்கள்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி

போப் பிரான்சிஸ் உடலுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் அஞ்சலி!

அமைச்சர் சா.மு.நாசர் – இனிகோ எஸ்.இருதயராஜ் எம்.எல்.ஏ. நேரில் செலுத்தினர்!

வாட்டிகன், ஏப்.27- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி போப் பிரான்சிஸ் உடலுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் அமைச்சர் சா.மு.நாசர், இனிகோ எஸ். இருதயராஜ் எம்.எல்.ஏ. ஆகியோர் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

கத்தோலிக்க திருச்சபையின் 266-வது தலைவராக அர்ஜென்டினாவைச் சேர்ந்த போப் பிரான்சிஸ் கடந்த 2013-ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டார். இவர் LGPTQ சமூகத்தினர் மற்றும் பாலின சமத்துவம் குறித்து தெரிவித்த முற்போக்கு கருத்துக்கள் பெரும் ஆதரவை பெற்றுத்தந்தது.

இதனிடையே உடல் நலக்குறைவால் கடந்த பிப்ரவரி 14-ல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ரோம் நகரின் ஜெமெல்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த போப் பிரான்சிஸ் மார்ச் 23-ஆம் தேதி வாடிகன் திரும்பினார்.

இந்நிலையில், உடல்நலக்குறைவு காரணமாக தனது 88-வது வயதில் போப் பிரான்சிஸ் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து உலகம் முழுவதும் இருந்து அவருக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில், பரிவோடும், "முற்போக்குக் கொள்கைகளோடும் கத்தோலிக்கத் திருச்சபையினை வழிநடத்தி, பெரும் மாற்றங்களை முன்னெடுத்த ஆளுமையான திருத்தந்தை போப் பிரான்சிஸ் அவர்களின் மறைவு குறித்து அறிந்து மிகவும் வேதனையடைந்ததாகத் தெரிவித்திருந்தார்.

அதோடு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மறைந்த போப் பிரான்சிஸ் அவர்களுக்கு இரங்கல் தீர்மானம் நிறை வேற்றப் பட்டது.

இந்நிலையில், ரோம் நகர் வாடிகனில் நடைபெறும் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் சார்பில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்ஆவடி சா.மு. நாசர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் இனிகோ எஸ். இருதயராஜ் ஆகியோர் கலந்து கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்

இந்நிலையில் நேற்று முன்தினம் (25.04.2025) அன்னாரின் உடலுக்கு இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் சார்பில் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், இனிகோஎஸ்.இருதயராஜ் பங்கேற்று. போப் பிரான்சிஸ் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

சேலம் மாவட்டத்தில் பட்டாசு விபத்து!

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஏப்.27- சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், கஞ்சநாயக்கன்பட்டி கிராமத்தில் பட்டாசு வெடித்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

திருச்சியில் மத்திய பேருந்து நிலையம் அருகில் இருக்கும் ரயில்வே பல்துறை மண்டல பயிற்சி மையத்தில் ரயில்வே பொது மேலாளர் ஆர்.எம்.சிங், கோட்ட ரயில்வே பொது மேலாளர் எம்.எஸ்.அன்பழகன் மற்றும் துறை அதிகாரிகளுடன் நடைபெற்ற வருடாந்திர ஆலோசனை கூட்டத்தில் பயணிகளின் தேவைகள் பற்றியும், தொகுதியில் தேவையான ரயில்வே மேம்பாட்டு பணிகள் பற்றியும் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, பங்கேற்று கோரிக்கைகளை எழுப்பினார் அருகில் தொ.மு.ச. பொதுச் செயலாளர் எம் சண்முகம் புதுச்சேரி எம்.பி. வைத்திலிங்கம் ஆகியோர் உள்ளனர்.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், கஞ்சநாயக்கன்பட்டி கிராமம், பூசாரிப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் நேற்று முன்தினம் (25.4.2025) இரவு சுமார் 8.50 மணியளவில் கஞ்சநாயக்கன்பட்டி திரௌபதி அம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு இருசக்கர வாகனத்தில் பட்டாசு மூட்டையை எடுத்துச்செல்லும் போது எதிர்பாராதவிதமாக பட்டாசு தீப்பிடித்து வெடித்ததில் கஞ்சநாயக்கன்பட்டி, கொட்டமேடுவைச் சேர்ந்த செல்வராஜ் (வயது 29), குருவாலி யூரைச் சேர்ந்த சிறுவர்கள் செல்வன். தமிழ் செல்வன் (வயது 11) த/பெ.சேட்டு மற்றும் செல்வன். கார்த்தி (வயது 11) த/பெ.சுப்பிர மணி ஆகிய மூன்று நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த கொட்ட மேடு வைச் சேர்ந்தலோகேஷ் (வயது 20) த/பெ.தங்கராஜ் என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகர மான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன் என அறிவித்துள்ளார்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்ட தொ.மு.ச. சார்பில்

ஓசூரில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் முப்பெரும் விழா!

மு.சண்முகம் எம்.பி.- ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ.- தே.மதியழகன் எம்.எல்.ஏ. -பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, ஏப்.27- கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூரில் தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் சார்பில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் முதல்வர் தளபதியார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் ஆனந்த் கிராண்ட் பேலஸில் இன்று (27.4.2025) காலை 10 மணியளவில் நடைபெற உள்ளது. நலத்திட்ட உதவிகள் விழாவிற்கு தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் கோபாலகிருஷ்ணன் தலைமை நடைபெற உள்ள விழாவில் தொ.மு.ச. பேரவை துணைத்தலைவர் கிருஷ்ணன் வரவேற்புரை ஆற்றுகிறார்

சின்னசாமி, சேகர், பத்மம்மா, பசவராஜ்,கிருஷ்ண மூர்த்தி, ஜேக்கப் ராஜ், மோகன், யசோதா, வெங்கடாசாமி, ரவீந்திரன், ஜெய்சங்கர், கோவிந்தராஜ்,சிவ வடிவேல், ரகு, குமார், கிருஷ்ணன், குணசேகரன், சிவக்குமார், சங்கர், ஷாலினி, வேலூ, முத்து சாமி, முருகேஷ் ஆகியோர் முன்னிலை வைக்க உள்ளனர்.

தொ.மு.ச.பேரவைபொதுச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான மு.சண்முகம், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச்செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், தொ.மு.ச. பேரவை தலைவர் நடராஜன்,

மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், ஓசூர் மாநகர மேயர் சத்யா, உள்ளிட்டோர் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்ற உள்ளனர் கூட்டத்தில் ஓசூர் மாநகர துணை மேயர் ஆனந்தய்யா, தொ.மு.ச. பேரவை பொருளாளர் வள்ளுவன், தொ.மு.ச. பேரவை துணை தலைவர் பொன்ராம் மற்றும் தொழிற்சங்க நிர்வாகிகள் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் இந்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராள மானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள உள்ளனர்.

முடிவில் தொ.மு.ச. நியாய விலை கடை சீனிவாசப்பா நன்றியுரை ஆற்றவுள்ளார்.

அழகிய உருவம்! அமைதியின் வடிவம்!

கல்லுமே கரையு மே!உன்
கலைமுகம் கண்டால்! அச்சு
வெல்லமே உன்ப டைப்பு!
வெல்லுமே பகையை! வெள்ளை
முல்லையின் உள்ள மே!நம்
முத்தமிழ் அறிஞ ருக்குச்
செல்லமே! செல்வ மே! நீ
சென்றதேன் எம்மை விட்டே?

உரைநடை எழுத்துச் செல்வம்!
உயர்தரக் கருத்துச் செல்வம்!
தருவாகிப் பயன்வி ளைக்கும்
தமிழ்ச்செல்வம்! தாய்வ யிற்றில்
கருவான அறிவுச் செல்வம்!
கழகத்தின் கொள்கைச் செல்வம்!
திருவாரூர் கொடைய ளித்தத்
திராவிடச் செல்வம் நீதான்!

சத்தியம் உனது செல்வம்!
சமத்துவம் உனது செல்வம்!
முத்தமிழ் உனது செல்வம்!
"முரசொலி" உனது செல்வம்!
பத்தரை மாற்றுப் பொன்போல்
பண்பில்நீ உயர்ந்த செல்வம்!
சித்தத்தில் கலந்த எங்கள்
செல்வத்துட் செல்வம் நீதான்!

கல்வியிற் சிறந்த செல்வம்!
கட்டுரை வரைந்த செல்வம்!
சொல்வளம் மிகுந்த செல்வம்!
சுயமரி யாதைச் செல்வம்!
நெல்வயல் போலும் ஆற்றல்
நிறைந்தநற் செல்வம்! எங்கள்
"செல்வியின் செல்வ மான
செல்வமே" சென்ற தெங்கே?

முழுநிலா வெளிச்சக் கண்கள்
மூடிற்றோ! அந்தோ! அன்பைப்
பொழிகின்ற பார்வை எங்கே?
பூஞ்சிரிப் பெங்கே? மின்னும்
அழகிய உருவம் எங்கே?
அமைதியின் வடிவம் எங்கே?
மொழியுணர் வூட்டி வைத்த
"முரசொலிப் புதையல்" எங்கே?

தூண்டினார்! குற்றச் சாட்டு
சுமத்தினார்! சட்ட மன்றக்
கூண்டிலே ஏற்றி னார்!நீ
குறுநகை புரிந்து நின்றாய்!
தாண்டினாய் தடையை! அன்புத்
தலைவரை நெகிழ வைத்தாய்!
மூண்டதோர் எதிர்ப்பை யெல்லாம்
" முரசொலி"க் காக ஏற்றாய்!

நேர்எதிர் குணமாய், நீரும்
நெருப்புமாய் உடன்பி றந்தீர்!
நீரோடை தம்பி! கோப
நெருப்பன்றோ அண்ணன் மாறன்!
கூர்தீட்டும் அண்ணன் கோபம்!
குளிர்விக்கும் உன்றன் ஈரம்!
தூரம்நீ சென்றாய்! நெஞ்சில்
சுமைதாங்கி டாத பாரம்!

"கலைஞரின்" மறைவுக் குப்பின்
கண்ணீரைப் பொழிந்த வண்ணம்
தலையிலே அடித்துக் கொண்டு
"தளபதி" அழுத காட்சி
மலைகூட உருகும்! எங்கள்
மனம்என்ன ஆகும்? சோக
வலையிலே எம்மை வீழ்த்தி
வழியில்ஏன் பிரிந்தாய் ஐயா!

துளைத்ததே கொடிய செய்தி!
துடித்ததே இதயம் யாவும்!
வளைத்ததே துன்பம்! பொங்கி
வழியும்கண் ணீர்து டைத்தே
களத்தில்நீ விட்டுச் சென்ற
கடமையைத் தொடர்வோம்! எங்கள்
உளத்தில்நீ என்றும் வாழ்வாய்
உயிர்ப்பூவாய்!வணங்குகின்றோம்!

இலைமீது துளிகள் அல்ல!
ஏட்டில்நீ வடித்த சொற்கள்
மலைமீது கல்வெட் டைப்போல்
நிலையான வரலா றாகும்!
கலைமிளிர் எழில்மு கத்தைக்
கவின்மிகு புன்சி ரிப்பைச்
சிலையிலே ஒளிரக் கண்டு
தேற்றிக்கொள் வோம்!ம னத்தை!

கவிச்சுடர்
கவிதைப்பித்தன்

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வே.இ. நாகூர்மீரான்
ஏப்ரல் 27 (2008)

நீதிக்கட்சியில் இணைந்து, பின்னர் திராவிடர் கழகத்தில் பணியாற்றி, கழகம் துவங்கிய பின்பு, அதில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

ஒருங்கிணைந்த நெல்லை மாவட்ட துணைச் செயலாளர், மேலப்பாளையம் நகரச் செயலாளர் என பல பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

நெல்லை மாநகராட்சி உறுப்பினராகவும், மண்டலக்குழு தலைவராகவும், மேலப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எம். கோபாலகிருஷ்ணன்
ஏப்ரல் 27 (2009)

திருச்சி மாவட்டம், மணப்பாறை நகரத்தில், கழக வளர்ச்சிக்கு பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

பத்தாண்டுகளுக்கும் மேலாக நகரக் கழகச் செயலாளராகவும், நகர்மன்ற உறுப்பினராகவும், பின்னர் துணைத் தலைவராகவும், இரு முறை நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

தலைமைக் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக, 1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.